# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC.32 of 2020 |
| Prosecution Witness | : | PW6 |

30.06.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இமானுவேல் ராயப்பன் | Calling | : | ஆய்வாளர் |
| Father Name | : | ஆரோக்கியசாமி | Age | : | 56 |
| Village | : | தஞ்சாவூர் | | : | |
| Taluk | : | | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வையம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆயவாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.11.2018 ம் தேதி மண்ணச்சநல்லூர் வட்டம் புலிவலம் காவல் நிலைய மண்ணச்சநல்லூர் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது புலிவலம் காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையினை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடத்திற்கு 13.50 மணிக்கு சென்று பார்வையிட்டு மனோகரன் மற்றும் ராமச்சந்திரன் முன்னிலையில் வரைபடம் மற்றும் மகஜர் தயார் செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் துறையூர் மருத்துவமனைக்கு சென்று 14.30 மணியளவில் சவகிடங்கினை மருத்துவமனையில் பார்வையிட்டு அங்கிருந்த விமல் ராஜ்

மற்றும் நந்தகுமார் ஆகியோரது உடலை பஞ்சாயத்தார் சரவணன், வீராய்யா திருப்பதி, கார்த்திக், துரைராஜ் மற்றும் கார்த்திக், அஜித் குமார், திருப்பதி, கார்த்திக் மற்றும் துரைராஜ ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து மேற்படி காவலர் 1883 செல்வகுமார் தபாலை பிரேத பரிசோதனைக்காக செல்வகுமாரிடம் கொடுத்து பிரேத பரிசோதனைக்காக அனுப்பினேன். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அங்கிருந்த சாட்சிகள் தர்மராஜ், கோபிநாத், பாலசுந்தரம், செல்வராஜ், சுப்பிரமணி, குமார், சரவணபவன், கணேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் புலிவலம் காவல் நிலையம் சென்ற போது விபத்து ஏற்படுத்திய எதிரி ஹேமராஜ் என்பவர் தனது ஜெ.சி.பி வாகனத்துடன் சரண் அடைய வந்தவரை 20.30 மணிக்கு கைது செய்தோம். பின்னர் ஜாமினில் விடிவு செய்கிறோம். பின்னர் விபத்து ஏற்படுத்திய ஜெ.சி.பி வாகனத்தை 13.11.2018 ம் தேதி மோட்டார்வாகன ஆய்வாளர் அனுப்பி பின்னர் விபத்திற்கு உண்டான TVS XL வாகனத்தை 06.12.2018 ம் தேதி மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பினேன். மோட்டாா வாகன ஆய்வு அறிக்கை (எண்ணிக்கை 2) **அ.சா.ஆ.7 மற்றும் 8** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விபத்தில் காயம் பட்ட விஜய் என்பவரை விசாரித்து விஜய் என்பவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் சி.ரம்யா மல்டி ஹஸ்பிட்டல் சுப்பிரமணி என்பவரிடம் சான்று பெற்று வாக்கு மூலம் பதிவு செய்தேன். காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.9** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பிரிவு 337 ஆல்டர் செய்து 338 ஆக ஆல்டர் செய்யப்பட்டது. சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 01.02.2019 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் முரளி என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் டாக்டர். வாசுமதியை

விசாரித்து சான்று பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.11** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த எஸ்.ஐ.ஜாகித்கான் மற்றும் பிரேதபரிசோதனைக்கு உதவியாக இருந்த காவல் செல்வகுமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே விபத்தை ஏற்படுததிய ேஹமராஜ் மீது 279, 338 மற்றும் 304(A)இ.த.ச. கீழ் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

புலிவலம் மற்றும் மண்ணச்சநல்லுர் காவல் நிலையத்திற்க ஒரே காவல் ஆய்வாளர் என்றும், சம்பவ தினத்தன்று சம்பவ நேரத்தில் நான் தான் மண்ணச்சநல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு விபத்து சம்பவம் பற்றி காவல் உதவி ஆய்வாளர் தகவல் சொன்னார். எத்தனை மணிக்கு தகவல் சொனனார் என்றால் சம்பவம் நடந்த உடனே தகவல் சொன்னார். தகவல் கிடைத்தஉடன் நான் நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று விட்டேன். என்னோடு வேறு யாரும் வரவில்லை நான் மட்டும் தான் சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு சுமார் 30–40 நபர்கள் இருந்திருப்பார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் சாட்ககளை விசாரணை செய்தேன் என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்பதை எனது புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது புகார்தாரர் அங்கிருந்தரா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் அவர் மருத்துவமனையில் இருந்தார். இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் தர்மராஜ், குமார், பாலசுந்தரம் ஆகியோரை மருத்துவமனையில் வைத்து விசாரித்து தான் வாக்கு மூலம்

பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம் பட்டவர், இறந்தவர், புகார் கொடுததவர் ஒரே கல்லூரியை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். விபத்துகுள்ளான இருச்சக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்து இறந்துபோன விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். விபத்தில் இறந்து போனவர்கள் மற்றும் காயம்பட்டவர்கள் ஒருவரும் 50-60 கிலோ எடை இருப்பார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. புகார்தாரர் தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்து போனவர்களுக்கும் தனக்கும் 200 மீட்டர் தூரம் இருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் அவ்வாறு என்னிடம் சொல்லவில்லை. விபத்தில் இறந்தவர்கள் ஒரே வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்ததற்கு அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அந்த வாகனத்தில் சென்ற மூவரும் தலைகவசம் அணியவில்லை என்று சொன்னால் சரிதான். எனது விசாரணையில் இறந்து போனவர்களுக்கு எத்தனை மணிக்கு தேர்வு நடந்து முடிந்தது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் எதிரி ஜெ.சி.பி வாகனத்தை ரோட்டில் நிறுத்தி கொண்டு தகுந்த எச்சரிக்கை பலகையுடன் வேலை செய்து கொண்டிருந்தார் என்றும் இவ்வழக்கின் இறந்து போன மற்றும் காயம் பட்டவர்கள் தேர்வை முடித்து விட்டு ஏதோ வேலைக்காக உடனடியாக செல்ல வேண்டும் என்பதற்கு அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி சென்று நின்று கொண்டிருந்த ஜே.சி.பி வாகனத்தின் மீது மோ்தி விபத்து ஏற்படு்த்தி விட்டார்கள் என்றும் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரி மீது எவ்வித தவறும் இல்லை என்றும் இருச்சக்கர வாகனத்தில் சென்ற மூவரும் உடல் எடை அதிகம்

உள்ளவர்கள் என்றும், வாகனத்தை ஓட்டிய நபர் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஜே.சி.பி வாகத்தின் மீது மோதி விட்டார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயம்பட்ட விஜய் என்பவர் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் 20.12.2018 வரை சிகிச்சை எடுத்துக்கொண்டார். விஜயை எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் 20.12.2018 அன்றே விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் விபத்துக்குள்ளான இருச்சக்கர வாகனத்தின் உரிமையாளர், வாகனத்தின் ஆவணங்கள் ஓட்டுநரின் ஆவணங்கள் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இருச்சக்கர வாகனத்தை 06.12.2018 அன்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பபட்டதற்கான கால தாமதத்தை சொல்லியுள்ளேனா என்றால் வாகனத்தின் ஆவணங்கள் வாங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டது. இவ்வழக்கில் இறந்து போனவர் மற்றும் காயம் பட்டவருக்கு விபத்து நஷ்ட ஈடு தருவதற்கு சரியாக புலம் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/—R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.